

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.2.40 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நகர்புற கண்காட்சி திடலினை இன்று (08.03.2017) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்ததை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று நகர்புற கண்காட்சி திடலை பார்வையிட்டு, குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.

செ.வெ.எண்:175/2017 நாள்: 08.03.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் நகர்புற கண்காட்சி திடலினை இன்று (08.03.2017) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.2.40 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நகர்புற கண்காட்சி திடலினை இன்று (08.03.2017) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்ததை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று நகர்புற கண்காட்சி திடலை பார்வையிட்டு, குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பின்னர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பூம்புகார் என்ற பெயரில் அனைவராலும் அறியப்பட்டு கைத்திறன் உலகில் தனியொரு முத்திரை பதித்து செம்மையாக செயல்படும் ஒரு நிறுவனம் ஆகும். நமது பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு இவைகளை கைவிளை கலைகள் மூலம் பேணிகாப்பதோடு கைவினை கலைஞர்களின் வாழ்வாதாரமாகவும் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் அவர்களுக்கு பல விருதுகளை கொடுத்து ஊக்குவித்து மற்றும் இக்கைவினை கலைகள் அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லும் ஓர் அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

கைவினை கலைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கத்தோடும், பொது மக்களுக்கு நேரடியாக அவர்கள் விற்பனை செய்யும வாய்ப்பாகவும் பூம்புகார் நிறுவனம் இக்கண்காட்சியினை நடத்துகின்றது.

இவ்வாண்டு 250 க்கும் மேலான சிறப்பு கண்காட்சிகளை கைவினைஞர்களும்,பொதுமக்களும் பயன் பெறும் வகையில் நாடெங்கும் நடத்தி வருவதோடு பண்டிகை காலங்களில் விழாக்கால கண்காட்சிகளை செம்மையாக நடத்தி வருகின்றது.

இதன் ஒரு தொடர்ச்சியாக அபிவிருத்தி ஆணையர் (கைவினைப்பொருட்கள்), ஜவுளித்துறை அமைச்சகம், மத்திய அரசு, புதுதில்லி மற்றும் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் அங்கமான கன்னியாகுமரியில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையம் (க்ராப்ட்ஸ் மேளா) என்ற சிறப்பு கண்காட்சியை கன்னியாகுமரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்புற திடலில் நடத்தி கொண்டிருக்கிறது. இக்கண்காட்சி 08.03.2017 முதல் 18.03.2017 வரை (ஞாயிறு உட்பட) நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியில் சிறப்பு அம்சமாக அனைத்து கலைப் பொருட்களும் இடம் பெற்றுள்ளன. பஞ்சலோக சிலைகள், கற்சிற்பங்கள், சந்தன மர சிற்பங்கள். சந்தன கட்டைகள்,

தஞ்சாவூர் கலை தட்டுகள், தஞ்சாவூர் கலை ஓவியங்கள், குத்து விளக்குகள், பித்தளை கலை பொருட்கள், நூக்கமரம், வெண்மர சிற்பங்கள், சில்க் மற்றும் வெல்வெட் ஓவியங்கள், முத்து, பவளம் மற்றும் நவரத்தின கற்களால் செய்யப்பட்ட நகை வகைகள், 1 கிராம் கோல்டு நகைகள், மாலைகள், நவரத்தின மாலைகள், ராசி கற்கள், ஸ்படிக மணிமாலைகள், மெத்தை விரிப்புகள், மங்களகிரி துணி வகைகள், பேன்சி சுடிதார் வகைகள், பத்திக் சேலைகள் மற்றும் துணி வகைகள், கலம்பாரி பைகள், காஷ்மீர் துணி வகைகள், பேன்சி சேலைகள், ருத்திராட்ச மணி மாலைகள், காதி சட்டைகள், பத்தமடை பாய்கள், சென்னப்பட்னா பொம்மைகள், லாக்கர்வேர் பொம்மைகள், காகித கூழ் பொம்மைகள், வாசனை மெழுகுவர்த்திகள், ஊதுவர்திகள், மற்றும் ஏராளமான பரிசு பொருட்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்சமாக ரூ.50 முதல் ரூ.1 இலட்சம் வரையில் கைவினை பொருட்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இக்கண்காட்சியில் சுமார் ரூ.12 இலட்சம் விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து பொருட்களுக்கும் சிறப்பு அம்சமாக 10 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும். அனைத்து வங்கி அட்டைகளுக்கும் எவ்வித சேவைக்கட்டணமும் இன்றி ஏற்று கொள்ளப்படும்.

இக்கண்காட்சியில் காட்சிக்கும் விற்பனைக்கும் பல்வேறு இடங்களில் இருந்து தருவிக்கப்பட்ட அழகிய கைவினை பொருட்களை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் வாங்கி தங்கள் இல்லத்திற்கு அழகூட்டி மகிழுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவத்தார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (கைத்திறத் தொழில்கள்) திரு.பாலு, பூம்புகார் மேலாளர் திரு.அருண், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.மணிசேகரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.